# பொள்ளாச்சி நகராட்சி
## 30.09.2021 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில்
## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்
## தீர்மான எண்.3032–3059

**3032)** இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள UPS BATTERY ACCESSORIES மற்றும் PRINTER CATRIDGE TONNER REFILLING 2017–18ம் ஆண்டு பராமரிப்பு மேற்கொண்ட பணிக்காக திரு.சாகர்எலக்ட்ரானிக்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை ரூ.13,150/–ஐ தனக்கு திரும்ப வழங்க விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் வைப்புத் தொகை காலங்கடநத வைப்புநிதிக் கணக்கில் உள்ளது. தணிக்கை முடிவுற்றதாலும் மற்றும் தணிக்கை நிலுவை ஏதும் இல்லாததாலும் மேற்படி தொகை ரூ.13,150/–ஐ திரு.சாகர் எலக்ட்ரானிக்ஸ் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகறது.

**<u>திரும்ப வழங்க வேண்டிய வைப்புத் தொகையின் விவரம்.</u>**

| வ. எண் | பணி விவரம் | நிதி | தொகை | பக்க எண் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள UPS BATTERY ACCESSORIES மற்றும் PRINTER CATRIDGE TONNER REFILLING 2017–18ம் ஆண்டு பராமரிப்பு பணி | EMD (வருவாய் நிதி) | 5,100 | 42 |
| | | ASD (வருவாய் நிதி) | 5,100 | 49 |
| | | ASD (வருவாய் நிதி) | 2,950 | 43 |
| | | **மொத்தம்** | **13,150** | |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 3612/2017/பி4**

**3033)** பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் வரிவசூல் செய்யும் மையங்களில் ரசீதுகள் கணினிகள் வாயிலாக வழங்கிட DOT MATRIX PRINTERகள் வாங்கப்பட்டு, 5 ஆண்டுகளாக பயன்பாட்டில் உள்ளது. தற்போது இதன் செயல்திறன் குறைந்துள்ளதால், வரிவசூல் பணிகள் தொய்வடைகிறது. வரிவசூலினை மேம்படுத்திட புதிதாக 7 எண்ணம் DOT MATRIX PRINTERகள் வாங்கிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.10 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலக பணிகளின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.04180/21/இ1**

**3034)** பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அறையில் நடைபெறும் ஆய்வு கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை பதிவு செய்ய CCTV Camera மற்றும் பதிவு

இயந்திரங்களை பொருத்திட வேண்டியுள்ளது. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.50,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலக பணிகளின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.04179/21/இ1**

**3035)** பொள்ளாச்சி நகராட்சியின் ஆணையாளர் அவர்கள் ஆய்வு கூட்டம் மற்றும் வெளியிட பணிகளின் போது நகராட்சி அலுவல்களை மென்பொருள் வாயிலாக கண்காணித்திடவும், அவ்வப்போது ஒப்புதல் மற்றும் உத்திரவுகளை வழங்கிட ஏதுவாக Tablet மற்றும் சார்பு உபகரணங்கள் அவசியம் வேண்டியுள்ளது. தற்போது உள்ள தொழில்நுட்பத்திற்கு தக்கவாறு Tablet மற்றும் சார்பு உபகரணங்களை கொள்முதல் செய்திடவும், இதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.90,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலக பணிகளின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.04178/21/இ1**

**3036)** பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான 11 வாகனங்கள், பயன்பாட்டிற்கு உகந்த நிலையில் இல்லாத Scrap condition–ல் உள்ள காரணத்தால், கீழ்க்காண் வாகனங்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஆண்டு முதல், பொது சாலையில் ஓட்டப்படாமல் நகராட்சிக்கு சொந்தமான தண்ணீர் தொட்டி வளாகம் மற்றும் லாரி நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வாகனத்தின் பெயர் | வாகனத்தின் பதிவு எண் | மாடல் | இறுதியாக வரி செலுத்திய விவரம் | இறுதியாக வாகனம் பொது சாலையில் இயக்கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | Big Lorry (Ashok Leyland) | TN 41 B 3477 | Apr-94 | 01.04.2015 | September-14 |
| 2 | Van ( Matadoor) i-PPV | TN 41 C 3948 | 1995 | 01.04.2017 | May-10 |
| 3 | Dipper (Tata Benz) | TN 41 E 0190 | 1997 | 01.04.2015 | June-14 |
| 4 | Dumper Blazer ( Tata) | TN 41 Q 3920 | Oct-05 | 01.04.2017 | April-15 |
| 5 | Dumper Blazer (Leyland -E Comet) | TN 41 Q 3007 | 2005 | 01.04.2017 | January-16 |
| 6 | Water lorry to conversion Dumper Blazer (leyland) | TN 41 B 2134 | Apr-94 | 01.04.2017 | January-15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | Water lorry to conversion Dumper Blazer (leyland) | TN 41 B 3478 | 1994 | 01.04.2017 | April-13 |
| 8 | Tipper  to conversion compacter | TN 41 Q 6390 | 2005 | 01.04.2018 | October-15 |
| 9 | Water lorry to conversion Dumper Blazer (leyland) | TN 41 H 3040 | 1999 | 01.04.2017 | March-14 |
| 10 | MINI Lorry Tata -407 | TN 41 E 0191 | 1997 | 01.04.2015 | December-12 |
| 11 | Lorry -Benz | TN 41 8013 | Jul-91 | 01.04.2012 | November-21 |

மேற்காண் வாகனங்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஆண்டு முதல் பொது சாலைகளில் ஓட்டப்படாமல் உள்ளது என்பதற்கான சான்றாக, எரிபொருள் பதிவேடு மற்றும் ஓட்டுநர் பதிவேடுகளின் நகல்கள், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே அதன் அடிப்படையில் Surrender clearance certificate வழங்கும்படி கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. நிர்வாகக் காரணங்களினால் மேற்காணும் வாகனங்களுக்கு வரிவிலக்கு நடவடிக்கை அன்றைய கால கட்டங்களில் ஏதும் மேற்கொள்ளவில்லை. மேலும், மேற்காண் வாகனங்கள் பொது சாலைகளில் இயக்கப்பட்டது என்று பின்னர் தெரியவந்தால், வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளக்கும் மற்றும் அதற்கான வரியை செலுத்துவதற்கும் முழு பொறுப்பும் நகராட்சியை சார்ந்தது என்ற விவரம் தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம்  அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3037)** நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலைய கடை எண்.26 மின் இணைப்பு இன்றி உள்ளது. தற்போது இக்கடை ஏலதாரரின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டியுள்ளதால், தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் விண்ணப்பித்து ஒரு முனை மின் இனணப்பு பெறவும், இதற்காகும் கட்டண தொகைகளை செலுத்தும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1131/2020/அ6**

<table>
<tr><td>3038)</td><td>நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலைய கடை எண்.22 மின் இணைப்பு இன்றி உள்ளது. தற்போது இக்கடை ஏலதாரரின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டியுள்ளதால், தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் விண்ணப்பித்து ஒரு முனை மின் இனணப்பு பெறவும், இதற்காகும் கட்டண தொகைகளை செலுத்தும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1131/2020/அ6</td></tr>
<tr><td>3039)</td><td>பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர், துறை தலைவர்கள் மற்றும் இதர பணியாளர்களை பொதுமக்கள் எளிதில் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொள்ளவும், அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் தங்களுக்குள் தொடர்பு கொள்ளவும், உள்சுற்று தொலைத் தொடர்பு (Intercom) வசதியினை, நகராட்சி அலுவலகத்தில் அவசியம் ஏற்படுத்திட வேண்டியுள்ளது. 15 எண்ணம் தொலைபேசிகளை கொண்ட IP-PBX Intercom இணைப்பு வசதியினை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அலுவலக பணிகளின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.04177/21/இ1</td></tr>
<tr><td>3040)</td><td>நகராட்சிக்கு சொந்தமான ஏலம் போகாமல் உள்ள கடைகளுக்கு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 15.09.2021ல் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட கடைகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>கடையின் விபரம்</th><th>பெயர்/முகவரி</th><th>மாத வாடகை ரூ</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">அண்ணா மத்திய பேருந்து நிலையம் கடை எண்.2</td><td>திரு.எஸ்.சதீஸ்<br>24 ராமகிருஷ்ணா புரம் வீதி<br>பொள்ளாச்சி</td><td>ரூ.11,000/-</td></tr>
<tr><td>திருமதி.நா.அமிர்தகலா<br>க/பெ நகராஜ்<br>1/52 காபுளிபாளையம்<br>கோவில்பாளையம்<br>பொள்ளாச்சி</td><td>ரூ.22,500/-</td></tr>
<tr><td>2.</td><td>அண்ணா கூடுதல் பேருந்து நிலையத்தில் உள்ள முதல் தள கடை எண்.16</td><td>திரு.A.நஜ்முதின்அகமது கபீர்<br>முரசொலிமாறன் வீதி<br>சூளேஸ்வரன்பட்டி<br>பொள்ளாச்சி</td><td>ரூ.1850/-</td></tr>
</table></td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 3. | கோட்டூர் ரோடு நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஸ்டேஷனரி மற்றும் தேனீர் கடை உரிமம் பெட்டி கடை எண்.1 | திரு.எஸ்.ரமேஷ் 28 திருமலையம்மாள் நகர் பழனிக்கவுண்டன் புதூர் பொள்ளாச்சி | ரூ.2301 |
| 4. | கோட்டூர் ரோடு நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஸ்டேஷனரி மற்றும் தேனீர் கடை உரிமம் பெட்டி கடை எண்.2 | | ரூ.2301/- |

மேற்காண் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர் மன்றத்தின் பார்வைக்கு மற்றும் முடிவிற்காக வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. வ.எண்.1ல் குறிப்பிட்டுள்ள கடைக்கு சுமார் 35 முறைக்கு மேல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை இக்கடைக்கு நகர் மன்ற தீர்மானம் எண்.2835 நாள்:26.02.2021ன் படி குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகை ரூ.22,500 /-க்கு திருமதி.நா.அமிர்தகலா என்பவர் கேட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. வ.எண்.2ல் குறிப்பிடப்பட்டுள்ள கடையானது கட்டப்பட்ட 2012 ஆண்டு முதல் காலியாகவே உள்ளது நாளது வரையில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை என்பதால் தற்போது வரப்பெற்றுள்ள திரு.எ.நஜ்முதின் அகமது கபீர் என்பவரின் மாத வாடகை தொகை ரூ.1850 /-க்கான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. வ.எண்.3ல் குறிப்பிடப்பட்டுள்ள பெட்டி கடை எண்.1க்கு சுமார் 5 முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் யாரும் முன்வரவில்லை கடந்தாண்டு தொகை ரூ.2191 /-க்கு குத்தகைக்கு விடப்பட்டு தற்போது கடந்தாண்டு தொகையினை விட கூடுதலாக திரு.ரமேஷ் எனபவர் மாத வாடகை தொகை ரூ.2301 /-க்கு சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
4. வ.எண்.3ல் குறிப்பிடப்பட்டுள்ள பெட்டி கடை எண்.2க்கு சுமார் 5 முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் யாரும் முன்வரவில்லை கடந்தாண்டு தொகை ரூ.2179 /-க்கு குத்தகைக்கு விடப்பட்டு தற்போது கடந்தாண்டு தொகையினை விட கூடுதலாக திரு.ரமேஷ் எனபவர் மாத வாடகை தொகை ரூ.2301 /-க்கு சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்:1131/2020/அ6**

**3041)** அண்ணா கூடுதல் பேருந்து நிலையத்தில் 8X6 அளவில் LED சுவர் விளம்பர பலகை வைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு 13.09.2021ல் ஏலும் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பெயர் / முகவரி | ஆண்டு குத்தகை தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு. நாசரூதீன் 105, கண்ணகி வீதி, மகாலிங்கபுரம் வீதி | ரூ.36,000/- |

| | | |
|---|---|---|
| | பொள்ளாச்சி | |
| 2. | திரு.P.பாலபிரகாஷ்<br>102, பாலகோபாலபுரம் வீதி<br>பொள்ளாச்சி | ரூ20,000/- |

மேற்காண் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நகர் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1. இக்குத்தகை இனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.P.பாலபிரகாஷ் என்பவர் கேட்டுள்ள ஆண்டு குத்தகை தொகை ரூ.20,000/-ஐ விட ரூ.16,000/- கூடுதலாக ஆண்டு குத்தகை தொகை ரூ.36000/-க்கு திரு.நாசருதீன் என்பவர் கேட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.5035/2020/அ6**

**3042)** நகராட்சி அண்ணா மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 15.09.2021ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் / முகவரி | ஆண்டு குத்தகை |
|---|---|---|
| 1. | திரு. G.ரவிச்சந்திரன்<br>3/37, ஆ.சங்கம்பாளையம்<br>மகாலிங்கபுரம்<br>பொள்ளாச்சி | ரூ.19.25.009/- |

மேற்காண் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நகர் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

2. இக்குத்தகை இனத்திற்கு நான்கு முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் யாரும் முன்வரவில்லை என்பதாலும் கடந்தாண்டு குத்தகை தொகை ரூ.19,23,648/-ஐ விட கூடுதலாக திரு.ரவிச்சந்திரன் எனபவர் ஆண்டு குத்தகை தொகையாக ரூ.19,25,009/-க் கேட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.5035/2020/அ6**

**3043)** அண்ணா மத்திய மற்றும் கூடுதல் பேருந்து நிலையத்தில் வரும் பேருந்துகளுக்கு மட்டும் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 15.09.2021ல் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர்/முகவரி | ஆண்டு குத்தகை தொகை ரூ |
|---|---|---|
| 1. | திருமதி.நா.அமிர்தகலா<br>க/பெ.நாகராஜ்<br>1/52. காள்ளிபாளையம்<br>கோவில்பாளையம்<br>பொள்ளாச்சி | 11,00,000/- |

| | | |
|---|---|---|
| 2. | திரு.G.R.பவின்<br>த/பெ.G.ரவிச்சந்திரன்<br>மலையப்பகவுண்டர் காலனி<br>ஆ.சங்கம்பாளையம்<br>பொள்ளாச்சி | 6,00,000/- |

மேற்காண் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்காக வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

இக்குத்தகை உரிமம் இதற்கு முன்பு ஆண்டு குத்தகை தொகை ரூ.15,10,872/-க்கு குத்தகைக்கு விடப்பட்டது. அதன் பின் 25.02.2020, 10.06.2020, 25.06.2020, 09.07.2020, 18.08.2020, 09.09.2020, 13.10.220, 29.10.2020, 19.11.2020, 31.11.2020, 13.01.2021 ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.ரவிச்சந்திரன் என்பவர் ரூ.6,12,009/- ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார், அதன்பின் நடைபெற்ற 09.02.2021, 25.02.2021, 22.06.2021, 06.07.2021, 16.07.2021, 29.07.2021, 13.08.2021 ஆகிய நாட்களில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி சுமார் 18 முறை கோரப்பட்டும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை.

01.07.2020 முதல் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதில் இரண்டு இளைநிலை உதவியாளர்கள் இரண்டு கடைநிலை ஊழியர் என நான்கு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அன்னார்களக்கான மாத ஊதியம் சராசரியாக

| | | மாதம் | ஆண்டு |
|---|---|---|---|
| **இளைநிலை உதவியாளர்கள்** | **இரண்டு நபர்கள் 30000x2** | **60.000** | **7,20,000** |
| **கடைநிலை பணியாளர்கள்** | **இரண்டு நபர்கள் 20000x2** | **40,000** | **4,80,000** |
| | | **1,00,000** | **12,00,000** |

மேற்கண்ட பணியாளர்களுக்கு ஆண்டுக்கு சராசரியாக ரூ.12,00,000/- ஊதியம் வழுங்கப்படுகிறது.

பேருந்து நிலையத்தில் நாள்தோறும் 250 பேருந்துகள் மட்டுமே வந்து செல்கிறது. 250xரூ.15 வீதம் நாள் ஒன்றுக்கு ரூ.3750/- ஆண்டுக்கு 13,85,750/- இதில் ஊதியம் போக ரூ.1,68,750/- மட்டும் நகராட்சிக்கு வருவாய் ஆகும். தற்போது 15.09.2021ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு.G.R.பவின் என்பவர் கேட்டுள்ள ஆண்டு குத்தகை தொகை ரூ.6,00,000/- விட ரூ.5,00,000/-கூடுதலாக திருமதி.நா.அமிர்தகலா என்பவர் ஆண்டு குத்தகை தொகை ரூ.11,00,000/- கேட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்:5035/2020/அ6**

**3044)** நகராட்சி பழைய பெண்கள் மேல்நிலை பள்ளி கட்டிடம் திரு.திருமூர்த்தி என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டு அன்னாரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு WP எண்:14522/2016ல் வழக்கு தொடரப்பட்டு 27.04.2016ல் நீதிமன்ற உத்திரவு வரப்பெற்றுள்ளது. மேலும் காந்தி வாரச்சந்தையில் நுழைவு சுங்கம் வசூல் உரிமம் திரு.நாச்சிமுத்து என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டு உரிமம் ரத்து செய்யப்பட்டு வைப்புத்தொகை திரும்ப வழங்க கோரி சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு WP எண்:16832/2021ல் வழக்கு தொடரப்பட்டு 12.08.2021ல் நீதிமன்ற உத்திரவு வரப்பெற்றுள்ளதற்கு திரு.ஆனந்த் வழக்கறிஞர் அவர்களிடம் சட்டக் கருத்துரு கோருவதற்கும், அதற்கான செலவினங்கள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| | <u>**அலுவலகக் குறிப்பு:**</u><br>1. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:3971/2021/அ6** |
| **3045)** | நகராட்சிக்கு சொந்தமான சமத்தூர் இராமஐயங்கார் ஆண்கள் மேல் நிலைப்பள்ளி மைதானத்தில் சறுக்கு விளையாட்டு திடல் உரிமம் (SKATING GROUND) குத்தகைக்கு விடுவது தொடர்பாக இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்:1888/2021/அ6 நாள்:17.08.2021ல் குழு அமைக்கப்பட்டு குழுவின் அறிக்கை நாள்:19.08.2021ன் படி நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகைக்கு விட குழுவால் கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>1. இக்குத்தகை இனத்திற்கு வைப்புத்தொகை ரூ.50,000/– கூடுதல் வைப்புத்தொகை ரூ.50,000/– ஆக நிர்ணயம் செய்யலாம்.<br>2. பயிற்சி கட்டணம் மாதம் நபர் ஒன்றுக்கு ரூ.500/– ஆக நிர்ணயம் செய்யலாம்.<br>3. இக் குத்தகை இனத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டுக்கு மட்டும் குத்தகைக்கு விடப்படும்.<br>4. குத்தகை உரிமம் பெறுபவர் ஆண்டு குத்தகை தொகையினை செலுத்திய பின்னரே உரிமம் ஒதுக்கீடு செய்து உத்திரவு வழங்கப்படும்<br>5. குத்தகை உரிமம் பெறுபவர் தம் சொந்த செலவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>6. கடையடைப்பு, போராட்டம், அரசால் தெரிவிக்கப்படும் அறிவிப்புகள் மற்றும் பேரிடர் காலங்களில் உரிமம் செயல்படாத சூழ்நிலை ஏற்படும் பட்சம் நகராட்சியின் மூலம் எவ்வித இழப்பீட்டு தொகை ஏதும் வழங்க இயலாது.<br>7. 2018–2021ம் ஆண்டின் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பொது மற்றும் சிறப்பு கட்டுப்பாடு நிபந்தனைகள் இதற்கு பொறுந்தும்.<br>மேற்காண் குழுவின் அறிக்கையின் படியும், இதர நிபந்தனைகளின் பொருந்தும் படியும் நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலகக் குறிப்பு**</u><br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்:1888/2021/அ6** |
| **3046)** | பொள்ளாச்சி நகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மற்றும் கொரோனா தடுப்பூசி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தினசரி, வாராந்திர மற்றும் மாதாந்திர பத்திரைக்கைகள் மற்றும் உள்ளூர் மாதாந்திர இதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/-திற்கும் மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.3662/2021/எச்2** |
| **3047)** | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகனம் எண் TN 41 T 4279 JCB வாகனத்திற்கு புதிய 2 டயர் டியூப் மாற்றம் செய்யும் பணிக்கு 29/09/2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br>**ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,** |

| வ. எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | N.Mahalingam & Company, 102, Coimbatore road, Pollachi | ரூ. 1,20,000/- |
| 2 | KVK Tyre Care, Vibgyor Valley, Kumaran Nagar Road, Pollachi | ரூ. 1,23,270/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள N.Mahalingam & Company, 102, Coimbatore road, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய N.Mahalingam & Company, 102, Coimbatore road, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் : எச்2/3183/2021**

**3048)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகனம் எண் TN 41 AH 2012 வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 14/09/2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

**ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,**

| வ. எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s. ஜே.டி அன் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி. | ரூ. 1,71,100/- |
| 2 | P.B. Sheriff Auto Diesel works. 25/67. A.B.T Road, Pollachi | ரூ. 1,78,770/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. ஜே.டி அன் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. ஜே.டி அன் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் : எச்2/3423/2021**

**3049)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகனம் எண் TN 41 AH 2012 வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 14/09/2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

**ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,**

<table>
<tr><td></td><td>

| வ. எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | M/s. ஜே.டி அன் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி. | ரூ. 1,69,330/- |
| 2 | P.B. Sheriff Auto Diesel works. 25/67. A.B.T Road, Pollachi | ரூ. 1,77,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. ஜே.டி அன் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
**அலுவலக குறிப்பு**<br>
1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. ஜே.டி அன் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
**ந.க.எண் : எச்2/3403/2021**
</td></tr>
<tr><td>3050)</td><td>பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்பட்டு வரும் வாகனம் எண் TN 41 T 4279 JCB வாகனத்திற்கு புதிய டயர் டியூப் மாற்றம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,25,000/- திற்கும், ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்- 3183/2021/எச்2</td></tr>
<tr><td>3051)</td><td>பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் விலங்குகள் பிறப்பு கட்டுப்பாடு (Animal Birth control) பணிக்கு இயக்கப்படும் வாகன எண் TN 41 AJ 5965 வாகனத்திற்கு பேட்டரி புதிதாக மாற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,500/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்-1899/2021/எச்2</td></tr>
<tr><td>3052)</td><td>பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்பட்டு வரும் வாகனம் எண் TN 41 AH 2032 (டிப்பர்) வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/- திற்கும் ஒப்பந்தபுள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்- 3423/2021/எச்2</td></tr>
</table>

| | |
|---|---|
| 3053) | பொள்ளாச்சி நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், மலேரியா பணியாளர்கள், பொறியர் பிரிவு பணியாளர்கள், குடிநீர் பிரிவு பணியாளர்கள், நகரமைப்பு பிரிவு சங்கிலியாளர்கள், தலைமை நீரேற்று நிலையப் பணியாளர்கள், மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2021–2022 ம் ஆண்டுக்கான சீருடைகள் கொள்முதல் செய்யவும் தையற்கூலி உட்பட அனைத்திற்கும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ. 5,00,000/– த்திற்கும், சீருடைகள் கொள்முதல் செய்து விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்– 4380/2021/எச்2** |
| 3054) | பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் தற்போது அதிக அளவில் கொரோனா பாதிப்பு ஏற்பட்டு வருகிறது கடந்த ஆண்டு மார்ச் 2020 முதல் பிப்ரவரி 2021 வரை பொள்ளாச்சி நகரில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 376 இறப்பு 10 நபர்கள் ஆகும். ஆனால் தற்போது கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி |

| வ.எண் | மாதம் | கோவிட்-19 தொற்று பாதிக்கப்பட்டவர்கள் | கோவிட்-19 இறப்பு |
|---|---|---|---|
| 1 | மார்ச்-2021 | 47 | 2 |
| 2 | ஏப்ரல்-2021 | 424 | 14 |
| 3 | மே-2021 | 1061 | 5 |
| மொத்தம் | | 1532 | 21 |

கோவிட்-19 பாதிப்பு நடப்பாண்டில் அதிகம் பொள்ளாச்சி நகர்பகுதிகளில் உள்ளது. தற்போது கோவை மாவட்டத்தில் தொடர்ந்து கோவிட்-19 வைரஸ் பரவுதல் அதிகம் இருப்பதாலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வுக்கூட்டங்களில் நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகளிலும் தினசரி ILI எனப்படும் சளி, காய்ச்சல், உடல்சோர்வு, உடல்வலி, தலைவலி போன்ற அறிகுறிகளுடன் உள்ளவர்களை உடனுக்குடன் கண்டறிந்து RTPCR TEST எடுக்க அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் நகராட்சிகளின் மண்டல இயக்குனர் அவர்களின் நேரடி ஆய்வின் போதும் இப்பணியினை உடன் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள்.

நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்கள் தமது ந.க.எண்.5437/2021/J1 எண்ணிட்ட நாள்.23.05.2021 சுற்றறிக்கையில் தினசரி 100 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் நியமித்து FEVER ACTIVE SURVILENCE WORKS மேற்கொள்ளவும் அதற்கு தற்போது உள்ள பணியாளர்களுடன் கூடுதலாக பணியாளர்கள் காய்ச்சல் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939 (PUBLIC HEALTH ACT 1939) பிரிவு 53-ன் படியும், பொது சுகாதார நலன் கருதியும் நோய் பரவல் வேகத்தினை கட்டுப்படுத்திடவும் தடுப்புப் பணிகள் மேற்கொள்ள கூடுதலாக 50 தற்காலிக பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

ஏற்கெனவே மாவட்ட ஆட்சியர் கோவை மாவட்டம் அவர்கள் நிர்ணயித்துள்ள DAILY WAGES MAஸDOOR தினக்கூலி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.400/- வீதம் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக ரூ.400/- [8 மணி நேர பணி] தினக்கூலி விகிதத்தில் 30 பணி நாட்களுக்கு 50/- தற்காலிக காய்ச்சல் கணக்கெடுப்பு பணியாளர்கள் DAILY WAGES MAஸDOORS ஏற்கனவே DBC பணியாளர்கள் இந்நகராட்சிக்கு சப்ளை செய்ய

ஒப்பந்தம் மேற்கொண்டு பணியாளர்கள் அளித்து வரும் ஒப்பந்த நிறுவனமான திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட்மேனேஜ்மெண்ட் சர்வீஸ் நிறுவனம் மூலம் கூடுதலாக 50 நபர்கள் 30 பணி நாட்களுக்கு சப்ளை செய்ய கோரவும். பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதியும் கோவிட்-19 பெருந்தொற்று தடுப்பு முக்கியத்துவம் கருதியும் உடனடியாக நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15-ன் கீழ் இதற்கு ஆகும் செலவினம் ரூ.6,00,000/- த்திற்கும் பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

3055) பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தின் உயர்மின் அழுத்த மின் இணைப்பில் உள்ள 8 Pole Structure, Transformers மற்றும் Panel Board–களின் பழுது மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 26.08.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/S:Hydro Mech Engineering Works, Erode. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.13% குறைவு. |
| 2. | M/S:Srri Jai Bhalajie Electricals Associate, Erode. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.80% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.13% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:Hydro Mech Engineering Works, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.13% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:Hydro Mech Engineering Works, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 0825/2021/இ1

3056) பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையத்தின் உயர்மின் அழுத்த மின் இணைப்பில் உள்ள 6 Pole Structure, Transformers மற்றும் Panel Board களின் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 26.08.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/S:Hydro Mech Engineering Works, Erode. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.46% குறைவு. |
| 2. | M/S:Srri Jai Bhalajie Electricals Associate, Erode. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.49% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.46% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்

M/S:Hydro Mech Engineering Works, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.46% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:Hydro Mech Engineering Works, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 0826/2021/இ1

**3057)**

பொள்ளாச்சி நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக நகராட்சியில் கீழ்கண்ட இடங்களில் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம் சுத்திகரிப்பு நிலையம் மார்கெட்ரோடு நீர் உந்து நிலையம் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள 9 உயர்மட்ட நீர் தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கீழ்ககண்டவாறு **Outsourcing** முறையில் பணியாட்கள் அமர்த்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து வரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம் | – | 3 நபர்கள் |
| 2. | மார்க்ட் ரோடு பூஸ்டர் | – | 3 நபர்கள் |
| 3. | வெங்கடேசா காலனி **OHT** | – | 3 நபர்கள் |
| 4. | மகாலிங்கபுரம் **OHT** | – | 3 நபர்கள் |
| 5. | சுதர்சன் நகர் **OHT** | – | 3 நபர்கள் |
| 6. | கே.ஆர்,ஜி,பி நகர் **OHT** | – | 3 நபர்கள் |
| 7. | **VKV** லே அவுட் **OHT** | – | 2 நபர்கள் |
| 8. | **KC** பார்க் **OHT** | – | 3 நபர்கள் |
| 9. | சோமசுந்தரம் லே அவுட் **OHT** | – | 2 நபர்கள் |
| 10. | ஜோதி நகர் **OHT** | – | 3 நபர்கள் |

மேற்கண்ட 28 பணியாளர்களுக்கு ஒப்பந்தம் விடப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்பெறுகின்றது.

மேற்கண்ட ஒப்பந்த பணி **30.09.2021**–ல் முடிவடைவதாலும், நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் காணொலி காட்சி அறிவுரைகள் நாள்.**31.07.2021**–ல் தமிழ்நாடு முழுவதும் ஒரே சீரான விலைவிகித பட்டியல் நகராட்சி நிர்வாக இயக்குனரகம், சென்னை அலுவலகத்தில் இருந்து விலையில் வழங்கப்பட உள்ளதாலும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்வதை தவிர்த்து, மேற்கண்ட பணியை சுயஉதவிக் குழு மூலம் அக்டோபர், மாதத்திற்கு மேற்கண்ட பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களின் ஆங்கீகரிக்கப்பட்ட விலைப் புள்ளிகளின் படி கூலி, **EPF, ESI, Insurance** தொகையுடன் சம்பளம் வழங்கவும், இதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**4.90**இலட்சம் ஆகும். மேற்காண் தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் இப்பணியினை சுய உதவிக்குழுவின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணி குடிநீர் அத்தியாவசிய பணியாக இருப்பதால், பணியின் அவசர அவசியம் கருதி சுய உதவிக் குழுவின் மூலம் பணி மேற்கோள்ள விலைப்புள்ளிகள் பெற்று மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து

மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**3058)** பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் பல்வேறு திட்டப்பணிகளான சாலைப்பணிகள், குடிநீர் பணிகள், பாதாள சாக்கடை பணிகளில் வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு அடிப்படை வசதிப் பணிகள் நடைபெற்று வருவதால், மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதியும், இந்நகராட்சியில் போதிய தொழில் நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், **Outsourcing** முறையில் தொழில்நுட்ப உதவியாளர் கிரேடு–I –ல் 1 நபர், தொழில்நுட்ப உதவியாளர் கிரேடு–II –ல் 1 நபர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் கிரேடு–III –ல் 2 நபர் ஒப்பந்த அடிப்படையில் இந்நகராட்சியில் பணிபுரிந்து வருகின்றனர். மேற்கண்ட ஒப்பந்தபணி 30.09.2021–ல் முடிவடைவதாலும், மேற்படி **Outsourcing** பணியாளர்களுக்கான விலைவிகிதப் பட்டியல் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் இருந்து விரைவில் தமிழ்நாடு முழுவதும் நிர்ணயம் செய்வதாக காணொலி காட்சி மூலம் நடைபெற்ற ஆய்வுக் கூட்ட நாள்.31.07.2021 நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளதாலும், மேற்கண்ட **Outsourcing** பணியினை சுயஉதவிக் குழுக்களிடம் விலைப்புள்ளி பெற்று, தற்காலிகமாக அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய 4 மாதங்களுக்கு பணியினை மேற்கொள்ளவும், மேற்கண்ட பணியாளர்களுக்கான சம்பளத் தொகையினை **Shedule of rates** 2021–22க்கான விலைப்பட்டியலும் **EPF. ESI, Insurance உடன் வரப்பெற்ற மதிப்பீட்டு தொகை ரூ.4.90 இலட்சம் ஆகும். மேற்கண்ட தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மேற்கண்ட பணியினை** 4 **மாதங்களுக்கு சுய உதவிக் குழுவின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இந்நகராட்சியின் திட்ட பணிகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டியுள்ளதால், பணியின் அவசர அவசியம் கருதி சுய உதவிக் குழுவின் மூலம் பணி மேற்கோள்ள விலைப்புள்ளிகள் பெற்று மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**3059)** பொள்ளாச்சி நகராட்சி அலுவலகம் மற்றும் ஆணையர் குடியிருப்பிற்கு வரிவசூல் மேற்கொள்ளுதல், கடித தகவல்களை பரிமாறிடவும் மற்றும் மென்பொருள்களை இயங்கிடவும், இணையதள வசதியினை வசதிகனை BSNL BROAD BAND இணைப்பில் பெறப்பட்டுள்ளது. இதில் தடை மற்றும் பழுதுகள் ஏற்படும் போது நகராட்சி அலுவலக பணிகள் தடைபடாவண்ணம் மாற்று இணைப்பாக Railwire BROAD BAND இணையதள வசதிக்கான இணைப்பு பெறப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதற்கான ஆண்டு சந்தா கட்டணம் கீழ்கண்டவாறு செலுத்த வேண்டியுள்ளது.

1. நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு – ரூ.39,197/–
2. ஆணையர் குடியிருப்பின் பயன்பாட்டிற்கு – ரூ.9,896/–

மேற்காண் Railwire BROAD BAND இணைப்பினை ஒப்புதல் பெற்ற M/s Syscon Systems, Coimbatore நிறுவனத்தால் இயக்கி பராமரிக்கப்பட்டு வருவதால், இந்நிறுவனம் வாயிலாக ஆண்டு சந்தா கட்டணத்தை செலுத்தவும், செலுத்தும் செலவின தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அலுவலக பணிகளின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று தொகையினை செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.04181/21/இ1